

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.9.2024) முகாம் அலுவலகத்தில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் கா.சொ.க. கண்ணன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட

நண்பர் கமலஹாசனின் அரசியல் பயணம் மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் வாழ்த்து!

சென்னை, செப். 23- மக்கள் நீதி மய்யம் கட்சியின் செயற்குழு, பொதுக் குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் அக் கட்சி யின் தலைவராக கமல ஹாசன்மீண்டும்தேர்ந்தெடுக் கப்பட்டார். இதனையடுத்து முதல்வர், தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத் துள்ள வாழ்த்துச் செய்தியில், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராக நண்பர் கமல ஹாசன் மீண்டும் தேர்ந்தெ டுக்கப்பட்டுள்ளார். அவரது அரசியல் பயணம் மென் மேலும் சிறக்க வாழ்த்துவ தாகக் குறிப்பிட் டார்.

கழகத் தலைவரும் தமிழ் நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (21.09. 2024) வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“பகுத்தறிவுச் சிந்தனையும், சமத்துவ நோக்கமும் கொண்டு பணியாற்றிவரும் அருமை நண்பர் கமல ஹாசன் அவர்கள் மீண்டும் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டதற்கும் அவரது அரசியல் பயணம் மென் மேலும் சிறக்கவும் என்னு டைய வாழ்த்துகள்!”

இவ்வாறு தலைவர், முதல் வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில்

ரூ.6.41 கோடி செலவில் 20 புதிய மருத்துவக் கட்டிடங்கள்!

அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - மா.சுப்பிரமணியன் - சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தனர்!

புதுக்கோட்டை, செப்.23- முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, புதுக்கோட்டை மாவட்டத் தில், மருத்துவம் மற்றும் மக் கள் நல்வாழ்வுத்துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை சார்பில், ரூ.6.41 கோடி செல வில் 20 புதிய மருத்துவக் கட் டிடங்களை, சட்டம், நீதிமன் றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மருத் துவம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத்துறை அமைச்சர் மா.சுப்பி ரமணி யன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய் யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா தலைமையில் நேற்று முன்தினம் (21.09.2024) திறந்து வைத்தார்கள்.

பின்னர் சட்டம், நீதிமன் றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரி வித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலன் காக் கும் வகையில் எண்ணற்ற மக் கள்நலத் திட்டங்களை சிறப் பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல் வாழ்வுத்துறை, பொதுசுகாதா ரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை துறையின் சார் பில், மக்களைத் தேடி மருத்து வம் திட்டம், இன்னுயிர் காப்போம் திட்டம், கலைஞ ரின் வருமுன் காப்போம் திட் டம், இதயம் காப்போம் திட் டம், சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம், புதுக்கோட்டை மாவட்டத் தில் ரூ.6.41 கோடி செலவில் 20 புதிய மருத்துவக் கட்டிடங் கள் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட் டத்தில், அரசு மருத்துவமனை கள், அரசு சுகாதார நிலையங் கள், துணை சுகாதார நிலையங்கள் உள்ளிட்ட பல் வேறு கட்டிட பணிகள் ரூ.78.48 கோடி செலவில் கட் டப்பட்டு வருகிறது. மேலும் மருத்துவத்துறை கட்டிடங்க ளின் உட்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு வருவது டன், மருத்துவ சிகிச்சைகள் பொதுமக்களுக்கு சிறப்பான முறையில் அளிக்கப்பட்டு வருகிறது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் இதுபோன்ற மக்கள் நலத்திட் டங்களை உரிய முறையில் பயன்படுத்தி தங்களது வாழ் வினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

பின்னர் மருத்துவம் மற் றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொது மக்கள் நோயற்ற நல்வாழ்வு வாழ்ந்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் பல் வேறு மருத்துவம் சார்ந்த திட் டங்களை செயல்படுத்தி வரு கிறார்கள். அந்த வகையில், அரசு மருத்துவக் கல்லூரிகள், அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலை யங்கள் மற்றும் துணை சுகா தார நிலையங்கள் உள்ளிட்ட வைகளின் செயல்பாடுகளை மேம்படுத்தி வருகிறார்கள். இதன்மூலம் பொதுமக்கள் நோயில்லா நல்வாழ்வு வாழ்ந் திட வழிவகை ஏற்படுகிறது. அதன்படி இன்றையதினம், புதுக்கோட்டை மாவட்டத் தில் ரூ.6.41 கோடி செலவில் 20 புதிய மருத்துவக் கட்டிடங் கள் திறந்து வைக்கப்பட் டுள்ளது.

அதன்படி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், களமா வூர் ஆரம்ப சுகாதார நிலையத் தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், களமாவ10ரில் ரூ.60 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடமும், கொடும் பா@ரில் ரூ.30 லட்சம் செல வில் கட்டப்பட்டுள்ள புதிய துணை சுகாதார நிலைய கட் டிடமும், அக்கல்நாயக்கன் பட்டியில் ரூ.20 லட்சம் செல வில் கட்டப்பட்டுள்ள புதிய துணை சுகாதார நிலைய கட் டிடமும், மேலப்பச்சக்குடி யில் ரூ.20 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய துணை சுகாதார நிலைய கட் டிடமும், முக்கணா மலைப் பட்டியில் ரூ.30 லட்சம் செல வில் கட்டப்பட்டுள்ள புதிய துணை சுகாதார நிலைய கட் டிடமும் மற்றும் பொங்கலா பட்டியில் ரூ.20 லட்சம் செல வில் கட்டப்பட்டுள்ள புதிய துணை சுகாதார நிலைய கட் டிடமும் திறந்து வைக்கப்பட் டது.

மேலும் பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியம், காரை யூர் ஆரம்ப சுகாதார நிலையத் தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காரையூரில் ரூ.50 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய வட்டார பொது சுகா தார அலகு கட்டிடமும், நமண சமுத்திரத்தில் ரூ.20 லட்சம் செலவில் கட்டப்பட் டுள்ள புதிய துணை சுகாதார நிலைய கட்டிடமும் மற்றும் ஆர்.பாலகுறிச்சியில் ரூ.35 லட்சம் செலவில் கட்டப்பட் டுள்ள புதிய துணை சுகாதார நிலையக் கட்டிடமும் திறந்து வைக்கப்பட்டது.

அறந்தாங்கி ஊராட்சி ஒன் றியம், ஆயிங்குடி துணை சுகா தார நிலையத்தில் நடை பெற்ற நிகழ்ச்சியில், ரூ.35 லட்சம் செலவில் ஆயிங்குடியி லும், ரூ.30 லட்சம் செலவில் சுனையக்காடிலும், ரூ.20 லட் சம் செலவில் ராஜேந்திரபுரத் திலும், ரூ.35 லட்சம் செலவில் ரெத்தினக்கோட்டையிலும், ரூ.46.5 லட்சம் செலவில் ஜெக தாப்பட்டினத்திலும், ரூ.30 லட்சம் செலவில் தாழனூரி லும், ரூ.30 லட்சம் செலவில் ஆலத்தூரிலும் கட்டப்பட் டுள்ள புதிய துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் மற்றும் ரூ.50 லட்சம் செலவில் திருவ ரங்குளம் வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.50 லட்சம் செலவில் நாகுடி வட்டார பொது சுகாதார அலகு கட்டிடம், ரூ.15 லட் சம் செலவில் பொன்பேத்தி சித்தா பிரிவு கட்டிடம் மற் றும் கறம்பக்குடி அரசு மருத்து வமனையில் ரூ.15 லட்சம் செலவில் சித்தா பிரிவு கட்டி டமும் என ஆகமொத்தம் ரூ.6.41 கோடி செலவில் 20 புதிய மருத்துவக் கட்டிடங் கள் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட் டத்தில் இந்த புதிய மருத்து வக் கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டதன் மூலம் இப் பகுதி பொதுமக்கள் நீண்ட தூரம் சென்று மருத்துவ சிகிச் சைகள் பெற்று வந்தது தவிர்க் கப்பட்டு தங்களது இல்லங்க ளுக்கு அருகிலேயே மருத்துவ சிகிச்சைகள் பெரும் வசதி ஏற் படுத்தப்பட்டுள்ளது.

எனவே, தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் பொதுமக்க ளின் நலனுக்காக செயல்படுத் தப்பட்டுள்ள இத்தகைய திட்டங்களை பொதுமக்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு நோயில்லா நல்வாழ்வு வாழ்ந் திட வேண்டும் எனவும் மருத் துவம் மற்றும் மக்கள் நல்வாழ் வுத்துறை அமைச்சர்மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

பின்னர் சுற்றுச்சூழல் மற் றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் மீது அதிக அக்கறைகொண்டு பல்வேறு நலத்திட்டங்களை செயல்ப டுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொதுமக்களுக்கு தேவையான மருத்துவ சிகிச் சைகளை இல்லங்களுக்கு அரு கிலேயே வழங்கிடும் வகை யில் பல்வேறு மருத்துவம் சார்ந்த திட்டங்கள் செயல்ப டுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டத் தில் பல்வேறு மருத்துவம் சார்ந்த கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

இந்த மருத்துவ கட்டிடங்க ளில் பொதுமக்களுக்கு தேவையான, மருத்துவ சிகிச் சைகள், மருத்துவ பரிசோத னைகள், மகப்பேறு பிரிவுகள் உள்ளிட்ட பல்வேறு மருத் துவ வசதிகள் ஏற்படுத்தப்பட் டுள்ளது. மேலும், இந்த புதிய மருத்துவ கட்டிடங்களை அனைவரும் சுகாதாரமான முறையில் பராமரித்திட வேண்டும்.

எனவே, தமிழக அரசு பொதுமக்களுக்கு தேவை யான அனைத்து நடவடிக்கை களை யும் சிறப்பான முறை யில் மேற்கொண்டு வருகிறது. இதனை அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்எனவும் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றத்துறை அமைச் சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், கரூர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி.எஸ்.ஜோதிமணி, சட்ட மன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக் கோட்டை), எம். சின்னத்துரை (கந்தர்வக் கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் திரு.கே.கே. செல்ல பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் கோ.ராஜ ராஜன்,

மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.ஜெய லட்சுமி தமிழ்செல்வன், மாந கராட்சி துணை மேயர் எம். லியாகத் அலி, இணை இயக்கு நர் (மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மரு.சா.ஸ்ரீபி ரியா தேன்மொழி, வருவாய் கோட்டாட்சியர்கள் அ.அக் பர்அலி (இலுப்பூர்), ச.சிவக்கு மார் (அறந்தாங்கி), அறந் தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு.ராம்க ணேஷ் (புதுக்கோட்டை), மரு.நமச்சிவாயம் (அறந் தாங்கி), முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் உதயம் சண் முகம், ஒன்றியக்குழுத் தலைவர்கள் திருமதி.காமு. மு.பி.மணி (விராலிமலை),

திருமதி.சுதா அடைக்கல மணி (பொன்னமராவதி), திரு மதி.மகேஸ்வரி சண்முகநா தன் (அறந்தாங்கி), திருமதி. வள்ளியம்மை தங்கமணி (திரு வரங்குளம்), அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சா லன், அரசு பல் மருத்துவக்கல் லூரி முதல்வர் மரு.ஞா. விமலா, செயற் பொறியாளர் (பொ.ப.து.) (கட்டட (ம) கட் டுமானப் பராமரிப்பு) தி.நாக வேலு, ஒன்றிய குழு உறுப்பி னர் மு.பி.ம.சத்திய சீலன்,

முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலை வர் த.சந்திரசேகரன், வட் டாட்சியர்கள் கருப்பையா (விராலிமலை), திருமதி.எம். சாந்தா முருகேசன் (பொன்ன மராவதி), வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.ஆயிஷா ராணி, வட்டார மருத்துவ அலுவலர்கள் மரு.ராகவி (விராலிமலை), மரு.அருள் மொழி நாகராஜ் (காரையூர்), முகமது இஸ்திரிஸ் (நாகுடி), முதலமைச்சர் மருத்துவ காப் பீட்டுத் திட்ட மாவட்ட திட்ட அலுவலர் கு.ரவிசங்கர், ஊராட்சிமன்றத் தலைவர்கள் திருமதி.ராஜேஸ்வரி ராஜ்கு மார் (களமாவூர்), முகமது இக் பால் (காரைய10ர்) மற்றும்வீர மணி, மு.பி.மணி, முத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலு வலர் கள் பலர் கலந்துகொண்ட னர்.

தஞ்சை மத்திய மாவட்ட, மாநகர தி.மு.க சார்பில் நடைபெற்ற மிசா எஸ்.நடராஜன் நூற்றாண்டு விழாவில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி என்.சிவா சிறப்புரையாற்றினார். உடன் தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம், ச.முரசொலி எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி. நீலமேகம் எம்.எல்.ஏ, தஞ்சை மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், எம்.இராமசந்திரன், து.செல்வம், கே.டி.மகேஸ்கிருஷ்ணசாமி, மாநிலக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எஸ்.ஜித்து, த.காரல்மார்க்ஸ், மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள், எல்.ஜி.அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, எஸ்.என்.மணிமாறன், கனகவள்ளி பாலாஜி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

நீலகிரி மாவட்ட - நகர - ஒன்றிய - பேரூர்க் கழக

மாணவர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பொறுப்புகளுக்கு நேர்காணல்!

மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் அறிக்கை!

சென்னை, செப். 23- நீலகிரி மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நீலகிரி மாவட்ட தி.மு.க., மாணவர் அணிக்கு மாவட்டத்திலுள்ள நகர - ஒன்றிய - பேரூர் கழக அள வில் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக் கப்பட உள்ளனர்.

இதற்காக வரும் 26.9.2024 வியாழக்கிழமை காலை 11 மணியளவில் நீல கிரி மாவட்ட தி.மு.க. அலு வலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் நேர்கா ணல் நடைபெற உள்ளது.

மாநில மாணவர் அணி செயலாளர் சி.வி.எம். பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பின்படி, மாநில மாணவர் அணி இணை செயலாளர் எஸ்.மோகன், மாநில துணை செயலாளர் வி.ஜி.கோகுல் ஆகியோர் நேர்காணல் நடத்த உள்ள னர் என்பதனை தெரிவித் துக்கொள்கிறேன்.

எனவே, மேற்படி நடை பெற உள்ள நேர்காணலில் அந்தந்த நகர - ஒன்றிய - பேரூர் கழக செயலாளர்க ளிடத்தில் விண்ணப்பித்த இளைஞர்கள், மாணவர் கள் மற்றும் மாணவர் அணி யில் இணைந்து செயலாற்ற ஆர்வமுள்ள கழக தோழர் கள் அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்க வேண்டு கிறேன்.

மேலும், ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மட் டுமின்றி, புதிதாகவும் நேர் காணல் நடைபெறும் அன்று மாவட்ட கழகத்தில் விண் ணப்பங்கள் பெற்று பூர்த்தி செய்து வழங்கியும் நேர்கா ணலில் கலந்துகொள்ளலாம் என்பதனையும் அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழ கச் செயலாளர் பா.மு.முபா ரக் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் செஞ்சி மஸ்தான் – கா.அமுதரசன் – ரா. தமிழரசன் பங்கேற்பு!

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் மாணவர் அணி நிர்வாகிகள் நேர்காணல்!

மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் அறிக்கை!

திண்டிவனம், செப்.23- விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பா ளர் டாக்டர் ப. சேகர் விடுத் துள்ள அறிக்கை வருமாறு.

விழுப்புரம் வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர ,பேரூர் கழக மாணவரணி நிர்வாகி களுக் கான நேர்காணல் 25. 9. 2024 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு திண்டிவனம் மயிலம் சாலையில் உள்ள ஜே. வி. எஸ் திருமண மண் டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ் தான், மாநில மாணவரணி துணை செயலாளர்கள் கா.அமுதுரசன்,சேலம் ரா. தமிழரசன் ஆகியோர் முன் னிலை வகிக்கின்றனர்.

நேர்காணல் நிகழ்ச்சியில் கல்லூரி பயிலும் மாணவ மாணவிகள் அரசு மற்றும் தனியார் கலை கல்லூரிகள், சட்டக் கல்லூரி, பொறியி யல் கல்லூரி, பாலிடெக் னிக், மற்றும் ஐடிஐ உள் ளிட்ட அனைத்து வகை கல்லூரி மாணவ, மாணவி யர் மற்றும் கல்லூரி படிப்பை முடித்த பட்டதா ரிகள்மட்டுமே நேர்காண லில் கலந்துகொள்வதற்கு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இதற்கான விண்ணப்ப படிவங்கள் அந்தந்த ஒன் றிய, நகர, பேரூர் கழக செய லாளர்களிடமும், நேர்கா ணல் நடைபெறும் நாளன்று திண்டிவனம் ஜே. வி .எஸ். திருமண மண்டபத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு.

நேர்காணலில் கலந்து கொள்பவர்கள் கொண்டு வர வேண்டிய ஆவண விவ ரங்கள்.

1.நேர்காணலில் கலந்து கொள்பவர்களுடைய பாஸ்போர்ட் சைஸ் போட்டோ 2 காப்பி. 2.மாற்றுச் சான்றி தழ்.3.பள்ளி, கல்லூரி, மாணவர்களுக்கான அடை யாள அட்டை. 4.ஆதார் அட்டை ஆகியவற்றின் ஜெராக்ஸ் நகல்ஆகிய வற்றை கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப் பாளர் டாக்டர் ப. சேகர் தனது அறிக்கையில் தெரி வித்துள்ளார்.

கடலூர் மண்டல கழக பொறியாளர் அணி ஆய்வுக் கூட்டம்!

எஸ்.கே.பி.கருணாநிதி - துரை கி.சரவணன் பங்கேற்பு

கடலூர்,செப்.23- தி.மு.க. மாநில பொறி யாளர் அணி கடலூர் மண் டல ஆய்வுக்கூட்டம் நெய் வேலி என்எல்சி தொ.மு.ச அலுவலகம் கலைஞர் அரங் கில் நடைபெற்றது. இதில் கடலூர் மண்டலம் பகுதிக ளைச் சேர்ந்த மாநில மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட் டத்திற்கு மாநில பொறியா ளர் அணி தலைவரும் முன் னாள் சட்டமன்ற உறுப்பினர் துரை.கி. சரவ ணன் தலைமை தாங்கி னார். கழக மாநில பொறி யாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணாநிதி கலந்து கொண்டு கலந் தாய்வு கூட்டம் நடத்தி சிறப்புரையாற்றினார். பொறியாளர் அணி மாநில துணை செயலாளர்கள் உமாநாத், பிரதீப், கடலூர் மேற்கு மாவட்ட பொறியா ளர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன், கிழக்கு மாவட்ட அமைப்பாளர் அப்பு சந்திரசேகரன்,தலை வர் ஸ்ரீராமன், துணைத்த லைவர் சரவணன், துணை அமைப்பாளர்கள், கே. பி.எம்.கார்த்திக்,து.இராஜ ராஜன், ரெ.குபேரன், ஏ. வினோத்குமார்,விக்னேஷ் வரன், செம்பியன், பாண்டு ரங்கன், கனக செந்தில், ராம் சிங், நிரஞ்சன், மற்றும் விழுப்புரம் பிரசாத், பாண் டிச்சேரி, மயிலாடுதுறை, கடலூர் மண்டல பகுதிக ளில் சேர்ந்த மாவட்ட நிர் வாகிகள் கலந்து கொண்ட னர்.

கடலூர் மேற்கு மாவட்டம், விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி கம்மாபுரம் மேற்கு ஒன்றிய கழக பொது உறுப்பினர் கூட்டம் ஆலடியில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர் , அமைச்சர் சி.வி. கணேசன் சிறப்புரையாற்றினார் . ஒன்றிய கழக செயலாளர் கோட்டேரி பழனி சுரேஷ் வரவேற்புரையாற்றினார். ஒன்றிய செயலாளர்கள் விருத்தாசலம் தெற்கு தி .வேல்முருகன், கம்மாபுரம் கிழக்கு ஆசை தம்பி, மகாலிங்கம், சி.ரங்கநாதன், எம்.எஸ் பன்னீர்செல்வம் மஞ்சுளா கிருஷ்ணமூர்த்தி, பி .எஸ் .அசோக்குமார், என். ஜி . ராமமூர்த்தி, என். சிவா, எஸ். வேல்முருகன், ஆர். கிருஷ்ணமூர்த்தி, வி.வி.எஸ் வெங்கடேசன், ஆட்டோ பாண்டியன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய ,கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள்,உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் அனைத்து ஒன்றிய கிளை கழக நிர்வாகிகளுக்கு 500 இரு வண்ண கழக கொடிகளை வழங்கப்பட்டது.